நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பூச்சிகள் இல்லாத நல்ல கத்தரிக்காய்...**

ந.குப்பன்

First Published : 16 Sep 2010 12:00:00 AM IST



கத்தரியைத் தாக்கும் பூச்சிகள், புழுக்கள்.

புதுச்சேரி: புதுவையில் துல்லிய வேளாண்மை திட்டத்தின் கீழ் காய்கறிச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானிய உதவி வழங்கப்படுகிறது.

குறிப்பாக புதுச்சேரி விவசாயிகள் கத்தரி சாகுபடியில் அதிகம் முனைப்பு காட்டுகின்றனர். கத்தரியில் நாட்டு ரகம், அதிக விளைச்சல் தரக்கூடிய வீரிய ரகங்கள் பாலூர்-2, ரவையா, செவ்வந்திபட்டி, உஜாலா ஆகிய ரகங்களை பயிர் செய்கின்றனர்.

காய்கறிச் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையிலும் இச் சாகுபடியில் விவசாயிகளுக்கு உதவும் வகையிலும் பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் தொடர்ந்து வயல்வெளி பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது.

தட்பவெப்பநிலை மாற்றம்

தட்பவெப்ப நிலை மாற்றம் காரணமாக கத்தரி இலையில் எபிலாக்னா வண்டுகள் அதிகமாக இலைகளைக் கடித்து உண்பதால் இலைகளில் பச்சையம் பாதிக்கப்பட்டு ஒளிச்சேர்க்கை நடைபெறுவது தடைபடுகிறது.

இதனால் மகசூல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி கத்தரியில் தண்டு துளைப்பான் மற்றும் காய் துளைப்பான் அதிகமாகக் காணப்படுகிறது. மாவுப் பூச்சியும் காணப்படுகிறது.

ரசாயன பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தியும் இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையின் மூலம் முக்கியமாக தாவரவியல் முறைகள்,

உயிரியல் கட்டுப்பாடு முறைகள் மூலமும் இதைக் கட்டுப்படுத்த முடியும் என்கிறார் பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியல் நிபுணர் டாக்டர் விஜயகுமார்.

அவர் சொல்லும் வழிமுறைகள்: ஓர் ஏக்கருக்கு ஒரு விளக்குப் பொறி அமைக்க வேண்டும். விளக்குப் பொறியில் மெர்குரி புளோரசன்ட் விளக்குகளைப் பொருத்தி இரவு நேரங்களில் மாலை 6 முதல் இரவு 10 வரை எரிய விட வேண்டும்.

அவ்வாறு செய்வதால் தண்டு மற்றும் காய் துளைப்பான் தாய் அந்துபூச்சிகளை முட்டை இடும் முன்பு கவர்ந்து இழுத்து அழிக்க முடியும். மேலும் ஓர் ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சி பொறிகளை வைப்பதன் மூலம் அந்த இனக்கவர்ச்சி பொறியில் உள்ள குப்பிகளில் உள்ள செக்ஸ் ஹார்மோன்கள் ஆண் அந்துபூச்சிகளை கவர்ந்து இழுத்து அழிக்கும்.

இது தொடர்பான தொழில்நுட்பங்கள் எங்கள் நிலையத்தில் கிடைக்கும். இது இல்லாமல் ஓர் ஏக்கருக்கு 5 நீர்ப் பொறிகள் அமைக்கலாம்.

ஓர் ஏக்கருக்கு 2 டிரைகோகிராமா கைலோனிஸ் என்ற ஒட்டுண்ணி அட்டைகளை ஓர் ஏக்கரில் கட்டினால் அதிலிருந்து 25 ஆயிரம் குளவிகள் வெளிவந்து தண்டு துளைப்பான் மற்றும் காய் துளைப்பான் முட்டைகளை அழிக்கும்.

இதனால் முட்டையில் இருந்து புழு வெளியே வராமல் தடுப்பதோடு, கத்தரி பயிரையும் காப்பாற்றலாம். ஓட்டுண்ணி அட்டை எங்கள் நிலையத்தில் கிடைக்கும்.

முட்டையில் இருந்து வெளியேறும் புழுக்களை அழிக்க 1 லிட்டர் தண்ணீரில் 2 மி.லி. 3 சதவீத வேப்ப எண்ணெய் அதனுடன் 1 கிராம் காதி சோப்பு கலந்து தெளிக்க வேண்டும். அப்போது வேப்ப எண்ணெய்யில் உள்ள அசாடிரக்தின் என்ற மூலப்பொருள்களின் கசப்புத் தன்மை காரணமாக புழுக்கள் தண்டு துளைக்காமலும் காயைத் துளைக்காமலும் விலகி ஓடிவிடும்.

ஒருவேளை புழுக்கள் துளைத்தாலும் குமட்டல் வந்து வாந்தி எடுத்து இறந்துவிடும். வேப்ப எண்ணெய்யை கத்தரிப் பயிரில் பூப் பூக்கும் தருணத்தில் ஒருமுறையும், பிஞ்சு வைக்கும் தருணத்தில் ஒரு முறையும் தெளிப்பதால் நல்ல பலன் கிடைக்கும்.

இது போன்று அதிகபட்சமாக இரண்டு தடவைக்கு மேல் வேப்ப எண்ணெய்யை பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு பயன்படுத்தினால் கத்தரி பயிரில் மலட்டுத் தன்மை ஏற்பட்டு மகசூல் குறைய நேரிடும்.

கத்தரிப் பயிரின் வேரின் அடிபாகத்தில் ஓர் ஏக்கருக்கு 80 முதல் 100 கிலோ தரமான வேப்ப புண்ணாக்கை இட்டு கால் மடிப்பதால் வேப்ப புண்ணாங்கு கசப்புத் தன்மை காரணமாக தண்டு துளைப்பான் கத்தரியின் தண்டில் நுழையாமல் தடுக்கப்படுகிறது.

வளர்ந்த புழுக்களைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 4 கிராம் பெவேரியா பேசியானா என்ற உயிர் ரக பூஞ்சாண் அல்லது பேசிலஸ் துரிஞ்சியன்சிஸ் என்ற உயிர் ரக பாக்டீரிய மருந்தை 1 லிட்டர் நீரில் 2 கிராம் என்ற அளவில் கலந்து ஓசோன் அதிகம் இருக்கக் கூடிய அதிகாலை பொழுதில் பூக்கள் மீது படும்படி தெளிக்க வேண்டும்.

இதனால் பூக்கள் மீது நோய் உருவாகி 5 தினங்களில் புழுக்கள் இறக்க நேரிடும். இது சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்காத முறை. இவ்வாறு ஒருங்கிணைந்த முறையில் காய், தண்டு துளைப்பானை கட்டுப்படுத்தலாம்.
இலையைச் சாப்பிடும் வண்டுகளைக் கட்டுப்படுத்த அதிகாலைப் பொழுதில் சாம்பலை ஓர் ஏக்கருக்கு 12 கிலோ எடுத்து அதை மணலுடன் கலந்து இலை பாகத்தில் தூவ வேண்டும்.
இவ்வாறு செய்வதால் சாம்பலில் உள்ள சிலிகா என்ற வேதிப் பொருள்களால் அந்த வண்டுகளின் பற்கள் உடைந்துவிடுகின்றன. வீட்டு சாம்பல், நிலக்கரி சாம்பல், செங்கல் சூளை சாம்பல், நெல் உமி சாம்பல் என்று எந்தச் சாம்பலையும் பயன்படுத்தலாம்.
மாவு உறிஞ்சும் பூச்சியைக் கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய் போதும். இல்லையென்றால் வெரிடிசிலியம் லீகானி என்ற உயிர் ரக பூஞ்ஞான மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 4 கிராம் என்ற அளவில் கரைத்து அதிகாலைப் பொழுதில் தெளிப்பதால் மாவுப் பூச்சி மீது நோய் உருவாக்கி பூச்சிகளை இறக்க வைக்க முடியும் என்கிறார் விஜயகுமார்.

**செப். 17 விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 15 Sep 2010 11:42:32 AM IST

சிவகங்கை, செப். 14: சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் செப்டம்பர் 17-ம் தேதி நடைபெறுகிறது.
மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் மகேசன் காசிராஜன் தலைமையில் இக்கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்தில் அனைத்து துறை உயர் அலுவலர்களும் பங்கேற்க இருக்கிறார்கள். எனவே மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் உள்ள விவசாயிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளுமாறு ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**17-ல் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்**

First Published : 15 Sep 2010 09:47:19 AM IST

விழுப்புரம், செப். 14: விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் வெள்ளிக்கிழமை (17-ம் தேதி) விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் ஆர்.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.
மாவட்ட அளவிலான அலுவலர்கள் கலந்துகொள்ளும் இந்த கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் குறைகளை தெரிவித்து நிவாரணம் பெறலாம் என்று தெரிவித்துள்ளார்.

தினமலர்

**விவசாயிகளுக்கு பஞ்சகாவியா பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,00:12 IST

புவனகிரி: புவனகிரி அருகே வண்டுராயன்பட்டு கிராமத்தில் விவசாயிகளுக்கு பஞ்சகாவியா உற்பத்தி குறித்து செயல்முறைகள் விளக்கப்பட்டது. புவனகிரி அருகே வண்டுராயன்பட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புல இறுதியாண்டு மாணவிகளின் வேளாண் பணி அனுபவம் குறித்து பயிற்சி நடந்து வருகிறது. நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு பஞ்சகாவியா பயன்படுத்தும் முறைகள் குறித்தும் அதன்மூலம் உற்பத்தி மற்றும் தயாரிக்கும் செயல் முறைகளைப் பற்றி ஆசிரியர் சொக்கலிங்கம் பயிற்சி அளித்தார்.

**வேர்க்கடலை அறுவடை பின் நேர்த்தி குறித்து வேளாண் அலுவலர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,00:03 IST

சிதம்பரம்: எண்ணெய் வித்து பயிரான வேர்க்கடலை பயிரிடும் விவசாயிகள் எண்ணெய் அளவு குறைத்து தரம் கெடாமல் காத்து, நல்ல விலையில் விற்பனை செய்யவும் அறுவடை பின் நேர்த்தி முறைகளை கையாள வேளாண் அலுவலர் சித்ரா கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கடலைச் செடிகளை 90 நாள் முதல் 110 நாளில் அறுவடை செய்ய வேண்டும். செடிகளைப் பிடுங்கி காய்களை தனியாகப் பிரித்து எடுத்து 8 மணி நேரம் காய வைக்க வேண்டும். காயும் போது 2 மணி நேரத்திற்கு ஒரு முறை நன்றாக கிளற வேண்டும். காய வைத்த காய்களில் ஈரப்பதம் 7 முதல் 11 சதவீதம் வரும் வரை காய வைக்க வேண்டும். நன்றாக காயவில்லை என்றால் அப்லாடாக்சின் என்ற பூஞ்சான வித்துக்களால் தாக்கப்பட்டு தரம் பாதிக்கப்படும். வேர்க்கடலை காய்கள் தரம் உள்ளதாக இருக்க அதில் கலந்துள்ள கல், மண், தூசி, கெட்டுப்போன காய்கள், சுருங்கிய முதிராத காய்கள், இதர ரகக் காய்களை தனியாக பிரித்தெடுக்க வேண்டும்.

சுத்தம் செய்யப்பட்டதை நல்ல கோணிப்பையில் போட்டு தரையில் மரச் சட்டங்கள் பரப்பி அதன் மேல் மூட்டைகளை அடுக்கி சேமிக்க வேண்டும். வேர்க் கடலை காய்களை உடைத்து பருப்பை

எடுத்து காய வைத்து சுத்தம் செய்து, சுத்தமான சாக்குப் பைகளில் அடைத்து விற்பனை செய்வதன் மூலம் காய்களாக விற்பதை விட அதிக லாபம் பெறலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப் பட்டுள்ளது.

**பூக்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு மானியம்: வேளாண் உதவி இயக்குனர்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,00:01 IST

சிறுபாக்கம்: மங்களூர் வட்டாரத்தில் பூக்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மங்களூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் முருகன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: மங்களூர் வட்டாரத்தைச் சேர்ந்த தோட்டக்கலை பயிர் செய்யும் விவசாயிகள் தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தில் பூக்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு 2010 - 11ம் ஆண்டிற்கான மங்களூர் வட்டாரத்தில் அனைத்து வகையான பூக்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கிட உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பூக்கள் பயிரிட்டுள்ள மற்றும் பயிரிட ஆர்வமுள்ள விவசாயிகள் தோட்டக்கலைத் துறையின் கள அலுவலர்களை அணுகி உரிய வருவாய்த் துறை ஆவணங்களான சிட்டா, அடங்கல், ரேஷன் கார்டு, புகைப்படம் ஆகியவற்றினை வழங்கி முன்பதிவு செய்து, மானியத்தை பெற்று பயனடையலாம்.

**வெள்ளம்: விளை நிலங்களில் பயிர்கள் சேதம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,02:45 IST

தலைவாசல்: சேலம் - உளுந்தூர்பேட்டை நான்கு வழிச்சாலை பணியின்போது நீரோடை மூடப்பட்டதால், கனமழையால் வெள்ள பெருக்கு ஏற்பட்டு விளை நிலங்களில் தண்ணீர் புகுந்தது.தலைவாசல், நாவக்குறிச்சி ஏரிகள் மற்றும் சிறிய ஓடைகளில் இருந்து நத்தக்கரை வழியாக செல்லும் பெரியேரி ஏரி மற்றும் வசிஷ்ட நதிக்கு நீரோடை செல்கிறது. மழை காலத்தில் நீரோடையில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது.சேலம் - உளுந்தூர்பேட்டை நான்கு வழிப்பாதை பணிகளுக்காக, சாலை இருபுறமும் அகலப்படுத்தும் பணிகள் நடந்தது.

அப்பணியின்போது, நத்தக்கரை மெயின்ரோடு வழியாக செல்லும் நீரோடை மூடப்பட்டது. அதனால் தண்ணீர் செல்ல முடியாமல் தேங்கி நின்றது.இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு தலைவாசல் சுற்றுவட்டார கிராமங்களில் கன மழை பெய்தது. இதனால், நத்தக்கரை நீரோடையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. தண்ணீர் செல்ல வழியில்லாததால், விளை

நிலங்களில் வெள்ளநீர் புகுந்தது. நீரோடை கரைகள் உடைப்பு ஏற்பட்டதில் 50 ஏக்கரில் பயிர் செய்திருந்த கரும்பு, பருத்தி, மரவள்ளி, சோளம் உள்ளிட்ட பயிர்கள் தண்ணீரில் மூழ்கியது.தலைவாசல் சுற்றுவட்டார பகுதியில் இரு தினங்களாக கன மழை பெய்து வருவதால், நீரோடைகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது.

நான்கு வழிச்சாலைக்கு தோண்டியுள்ள பள்ளத்தில் குளம் போல் தண்ணீர் தேங்கி நிற்கிறது. ஈரப்பதம் காரணமாக விஷ பாம்புகள் அதிகளவில் குடியிருப்புகளில் புகுந்து கொள்கிறது. நேற்று பட்டுத்துறை கிராமத்தில் வீட்டினுள் புகுந்த 6 அடி நீளமுள்ள சாரை பாம்பு ஒன்றை, பொதுமக்கள் ஒன்று சேர்ந்து அடித்து கொன்றனர்.

இதுகுறித்து நத்தக்கரை கிராம விவசாயிகள் பிரேம்குமார், சக்திவேல் கூறியதாவது:நான்கு வழிச்சாலை பணியின்போது, நீரோடை மூடப்பட்டது. மாற்றுப்பாதை அமைக்கப்படாததால், கனமழையில் ஏற்பட்ட வெள்ளநீர் விளை நிலங்களில் புகுந்தது. நீரோடையில் ஆக்கிரமிப்பு நிறைந்து காணப்படுவதால், பயிர்கள் சேதமடைகின்றன. மழைநீர் செல்ல வழி அமைத்து விளைநிலங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

**நவம்பரில் சூரியகாந்திக்கு விலை குறைய...அறுவடை செய்த விதையை விற்க அறிவுரை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,01:47 IST

நாமக்கல்: "நவம்பர் மாதத்தில் சூரியகாந்தி விலை குறைய வாய்ப்பு உள்ளதால், அறுவடை செய்த சூரியகாந்தி விதையை விவசாயிகள் உடனே விற்று வருமானத்தை பார்க்கலாம்' என, வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு) சவுந்திரராஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:சூரியகாந்தி உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் மிக முக்கிய உணவு எண்ணெய். இது வனஸ்பதி, சோப்புகள் மற்றும் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. அதன் புண்ணாக்கு 40-44 உயர்ரக புரதச்சத்தை உள்ளடக்கியது.அது கோழி மற்றும் கால்நடை வளர்ப்பிலும் வெகுவாகப் பயன்படுத்தப்படுகிறது. உலக அளவில் சூரியகாந்தி பயிரிடப்படும் பரப்பில் இந்தியா 8.19 சதவீதம் கொண்டுள்ளது. இப்பகுதியில் சூரியகாந்திப் பயிரானது கார்த்திகை (அக்டோபர் முதல் நவம்பர் வரை) மற்றும் சித்திரை (ஏப்ரல் முதல் மே வரை) பட்டங்களில் பயிரிடப்படுகிறது.சந்தை நிலவரப்படி அதிகமான வரத்து மார்ச், மே, ஜுன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பெறப்படுகிறது. தமிழகத்தில் தற்போது சித்திரைப்பட்டத்தில் விளைவித்த சூரியகாந்தி சந்தைக்கு வரத்துவங்கி உள்ளது.

உணவு எண்ணெய் இறக்குமதி 8.6 மில்லியன் டன். அதில் பாமாயில் 6.95 மில்லியன் டன், சோயா எண்ணெய் 1.0 டன், சூரியகாந்தி 60 ஆயிரம் டன். இதர எண்ணெய் வகைகள் 40 ஆயிரம் டன் என வர்த்தக ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.தமிழக விவசாயிகள் அதிகப்படியாக இறக்குமதி செய்யப்படும் பாமாயினால் எதிர்வரும் மாதங்களில் சூரியகாந்தி விலை குறையுமா, மற்றும் அறுவடை செய்த சூரியகாந்தியை உடனடியாக விற்பதா அல்லது சேமித்து வைத்து விற்பதா என சந்தேகம் எழுப்பி உள்ளனர்.

அவர்களின் சந்தேகங்களுக்கு விடையளிக்க தமிழ்நாடு வேளாண் பல்கலையில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், பத்து ஆண்டுகளாக வெள்ளக்கோவில் சந்தையில் நிலவிய விலையை ஆய்வு செய்தது.சாதாரணமாக ஒரு ஏக்கர் நீர்பாசன நிலத்தில் 800 முதல் 1,100 வரை சூரியகாந்தி மகசூல் கிடைக்கிறது. ஆனால், இப்பருவத்தில் தரமற்ற விதை, பூச்சித்தாக்குதல், வேலையாட்கள் தட்டுப்பாடு மற்றும் தொடர்ந்து சூரியகாந்தியே பயிரிட்டதும் 450 முதல் 500 கிலோ வரை மகசூல் குறைவதற்கான முக்கிய காரணம்.மேலும், ஆய்வு முடிவுகளின்படி செப்டம்பர் முதல் அக்டோபர் வரை சூரியகாந்தி விலை ஒன்றுக்கு 23 ரூபாய் முதல் 26 ரூபாய் வரை இருக்கும். உயர்ரக விதைகளுக்கு 30 ரூபாய் வரை கிலோவுக்கு விலை கிடைக்கும். நவம்பர் மாதத்தில் விலைக்குறையவும் வாய்ப்பு உள்ளது. விவசாயிகள் சூரியகாந்தி விதையை அறுவடை செய்தும் உடனே விற்றுவிடும்படி பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மாவுப்பூச்சியை அழிக்கவேம்பு மருந்து சிபாரிசு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,02:24 IST

ராசிபுரம்: "வேம்பு மருந்து தெளிப்பதன் மூலம், மரவள்ளி கிழங்கில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தலாம்' என, நாமகிரிப்பேட்டை வேளாண் உதவி இயக்குனர் இளங்கோ தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் சாகுபடி செய்துள்ள மரவள்ளி கிழங்கு செடிகளில் மாவுப்பூச்சி அதிக அளவில் தாக்கி சேதம் ஏற்படுத்தி வருகிறது.

அதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகிகின்றனர். மரவள்ளி கிழங்கு அறுவடை ஓரிரு மாதங்களில் துவங்க உள்ளதால், இது கிழங்கு பருமனாக வேண்டிய தருணம். எனவே, விவசாயிகள் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, மழை பெய்தவுடன் வேம்பு மருந்து 2.5 மில்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் தகுந்த ஒட்டும் பசையுடன் கலந்து செடிகளின் இலை பகுதி

முழுவதும் நன்கு நனையுமாறு கைத்தெளிப்பான்கள் கொண்டு தெளிக்கவும்.மழையில்லாமல் இருந்தால் தண்ணீரை செடிகளின் பகுதி நன்கு நனையுமாறு முதலில் தெளித்துவிட்டு, பின் வேம்பு மருந்தினை தெளிக்கவும். ஒரு வார இடைவெளியில் புரோப்பனாபாஸ் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் இரண்டு மில்லி தகுந்த ஒட்டும் திரவத்துடன் கலந்து செடிகள் முழுவதும் நனையுமாறு தெளிக்க வேண்டும்.இந்த பயிர் பாதுகாப்பு முறையை விவசாயிகள் கையாண்டால் மரவள்ளியில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**செம்மை நெல் சாகுபடிமுனைப்பு கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,02:17 IST

மோகனூர்: மோகனூர் வட்டாரம் ஒருவந்தூர் ஊராட்சி நடுநிலைப்பள்ளியில் வேளாண் துறை சார்பில், செம்மை நெல் சாகுபடி முனைப்பு கூட்டம் நடந்தது.வட்டார வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜு தலைமை வகித்து, செம்மை நெல் சாகுபடி முறைகள், அதன் தொழில் நுட்பங்கள் மற்றும் செயல் விளக்கத்திடல்கள் அமைப்பதற்கான மானியம் குறித்து பேசினார்.துணை வேளாண் அலுவலர்கள் தங்கராசு, சந்திரசேகரன், மோகன்ராஜ், முன்னோடி விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**வெற்றிலை ஆராய்ச்சி மையம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,01:43 IST

நாமக்கல்: "ப.வேலூர் பகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும்' என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடம் எழுந்துள்ளது.நாமக்கல் மாவட்டம் ப.வேலூர், மோகனூர் வழியாக காவிரி ஆறு பாய்ந்தோடுகிறது. ஆற்றங்கரை ஓரம் உள்ள மோகனூர், பாலப்பட்டி, ப.வேலூர், பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. மோகனூர், ப.வேலூர் ஆகிய பகுதிகளில் கூடும் வெற்றிலை மார்க்கெட் மூலம் மாநிலம் முழுவதும் மட்டுமின்றி பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது வெற்றிலை விவசாயத்தை சார்ந்து பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன்பெற்று வருகின்றனர்.

பருவநிலை மாற்றத்தால் போதிய மழைப்பொழிவின்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வெற்றிலை விவசாயம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. அவ்வப்போது ஏற்படும் நோய் தாக்குதலாலும் வெற்றிலை விவசாயம் நசிவதால், பல லட்சம் முதலீடு செய்யும் விவசாயிகள் கடும்

பாதிப்புக்குள்ளாகின்றனர். இது போன்ற பாதிப்புகளில் இருந்து மீள்வதற்கு வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டுமென, வெற்றிலை விவசாயிகள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.கடந்த 1970ம் ஆண்டு ப.வேலூர் தோட்டக்கலைத் துறையினர் மூலம் வெற்றிலை மேம்பாட்டு விரிவாக்க திட்டம் செயல்படுத்தப்பட்டது.

அதை தொடர்ந்து திருச்சி மாவட்டம் சிறுகமணி கிராமத்தில் வேளாண் அறிவியல் மையத்துடன் இணைந்து வெற்றிலை ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தப்பட்டது.ப.வேலூரில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை விவசாயம் மேற்கொள்ளப்படுவதால், திருச்சி மாவட்டத்தில் உள்ள இம்மையத்தை ப.வேலூருக்கு மாற்றம் செய்ய வேண்டும். இல்லையெனில் ப.வேலூரில் புதிய வெற்றிலை ஆராய்ச்சி மையம் ஏற்படுத்த வேண்டும் என பல ஆண்டுகளாக வெற்றிலை விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.தேர்தலின்போது, ப.வேலூரில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் ஏற்படுவத்துவதாக உறுதியளிக்கும் வேட்பாளர்கள், அதன்பின் கண்டு கொள்வதில்லை என்பது அப்பகுதி வெற்றிலை விவசாயிகளின் ஆதங்கமாக உள்ளது.

**அரசு நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படுமா?**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,02:40 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதியில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என, அறிவிக்கப்பட்டு ஒரு வாரமாகியும், நேற்று வரை அவை திறக்கப்படவில்லை.பவானிசாகர் அணையில் இருந்து ஏப்ரல் 15ம் தேதி அரக்கன் கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனம் முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. ஆகஸ்ட் மாதம் நெல் அறுவடை துவங்கியது.வழக்கமாக பா.நஞ்ச கவுண்டன்பாளைம், ஒத்த குதிரை, டி.என்.பாளையம், காசிப்பாளையம், கூகலூர், கள்ளிப்பட்டி, புதுக்கரைபுதூர், மேவாணி உள்ளிட்ட எட்டு இடங்களில் அரசு தரப்பில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படுவது வழக்கம்.

நடப்பாண்டு ஒத்தக்குதிரை, பா.நஞ்சகவுண்டன் பாளையம் ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே அரசு தரப்பில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் கூறியதாவது:கோபி பகுதியில் இரண்டு கொள்முதல் நிலையங்களே இருப்பதால், விவசாயிகள் கொண்டு செல்லும் நெல்லை எடுத்துக் கொள்வதில், ஊழியர்கள் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

எடை போட ஐந்து நாட்கள் வரையாகிறது. காத்திருக்கும் வேளையில் மழை வந்தால், நெல்லை பாதுகாக்க வசதியில்லாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.
சன்னரக நெல் 260 கிலோவுக்கு 2,100 ரூபாய் முதல் 2,200 ரூபாய் வரை தனியார் வியாபாரிகள் தருகின்றனர். ஆனால், அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் 2,860 ரூபாய் வரை கிடைக்கிறது. ஆனால், இரண்டே கொள்முதல் நிலையங்கள் இருப்பதால், நெல்லை எடை போட நான்கைந்து நாட்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. நெல் கொள்முதல் செய்ய ஒரு நாளுக்கு இரண்டு முதல் மூன்று லட்சம் ரூபாய் மட்டுமே இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது.இப்பிரச்னைகளால் தனியார் வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு நெல்லை விற்க வேண்டியுள்ளது. மாவட்ட நிர்வாகம் தாமதிக்காமல் கூடுதல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும்.ஈரோடு மாவட்ட கலெக்டராக உதயச்சந்திரன் இருந்தபோது, விவசாயிகளை தேடிச் சென்று நெல் கொள்முதல் செய்யும் "மொபைல் சிஸ்டம்' அறிமுகம் செய்தார். இதனால், விவசாயிகளுக்கு போக்குவரத்து செலவும், மழையில் நெல் வீணாவதும் குறைந்தது. இம்முறையை நடைமுறைப்படுத்தினால் விவசாயிகள் பெரிதும் பயன்பெறுவர்.
தனியார் வியாபாரிகளின் ஆலோசனைப்படி, நெல் கொள்முதல் செய்யாமல் விவசாயிகளை திருப்பி அனுப்பும் வேலையில் நெல் கொள்முதல் நிலைய ஊழியர்கள் சிலர் ஈடுபடுகின்றனர். அவர்கள் மீது மாவட்ட நிர்வாகம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்

**தேங்காய் பருப்புமேலும் ரூ.5 உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,02:43 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டார பகுதிகளில் பெய்து தொடர் மழையால் தேங்காய் பருப்பு உற்பத்தி வெகுவாக குறைந்தது. வரத்து குறைவால் கடந்த வாரத்தை விட தேங்காய் பருப்பு கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை விலை உயர்ந்தது.தேங்காய் எண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள விலை உயர்வால், ஒரு மாதமாக தேங்காய் பருப்புக்கு அதிக விலை கிடைத்து வருகிறது. விவசாயிகள் தேங்காய் பருப்பை உற்பத்தி செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த சில நாட்களாக கோபி வட்டாரத்தில் தொடர்மழை பெய்து வருகிறது. பகல் நேரங்களில் கூட குளிர்ந்த சீதோஷ்ண நிலை நீடித்து வருகிறது.

இதனால் தேங்காய் பருப்பை முழுமையாக காய வைக்க முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர்.கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு கடந்த வாரம் 690 மூட்டை தேங்காய் பருப்பு விற்பனைக்கு வந்தது. நடப்பு வாரம் 480 மூட்டை மட்டுமே வந்தது. கடந்த வாரம் தேங்காய் பருப்பு கிலோவுக்கு அதிகபட்சமாக 44.18 ரூபாய் வரை விற்றது. நடப்பு வாரம் 49

ரூபாய், குறைந்தபட்சம் 45.11 ரூபாய், சராசரியாக 46.50 ரூபாய் விலை கிடைத்தது.நடப்பு வாரம் தேங்காய் பருப்பு கிலோவுக்கு ஐந்து ரூபாய் 18 பைசா வரை விலை அதிகரித்திருந்தது. 12 லட்சம் ரூபாய் மதிப்பில் தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது.

**மானிய விலையில் வழங்க உரமூட்டைகள் இருப்பு வைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,03:12 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய வேளாண் அலுவலகத்தில், விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குவதற்காக "ஜிப்சம்' உர மூட்டைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய வேளாண் துறை உதவி இயக்குனர் மோகனசுந்தரம் கூறியதாவது: பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில், சித்திரை மற்றும் மார்கழி பட்டத்தில், நிலக்கடலை சாகுபடி நடக்கிறது. ஒரு விவசாயிக்கு ஹெக்டேருக்கு 750 ரூபாய் மானிய விலையில் 400 கிலோ உரம் வழங்கப்படுகிறது. அலுவலகத்தில், 60 டன் உர மூட்டைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இதைக்கொண்டு, 200 ஹெக்டேர் பரப்பில் நிலக்கடலை சாகுபடிக்கு மானிய விலையில் உர மூட்டைகள் வழங்கப்படவுள்ளன. நிலக்கடலை பயிரில் பூக்கள் பூக்கும் சமயத்தில், இரண்டாவது களை எடுக்கப்பட்ட பின் மண் அணைப்பு செய்யும் போது, விவசாயிகள் ஜிப்சம் உரம் இட வேண்டும். இதன்மூலம், விளைச்சல் அதிகளவில் இருப்பதோடு, எண்ணெய் சத்து உள்ளதாகவும் இருக்கும். மானிய விலையில் உரம் பெற விரும்பும் விவசாயிகள், வேளாண் துறை அதிகாரிகளை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, உதவி இயக்குனர் தெரிவித்தார்.

**கொப்பள நோயால் தேயிலை செடிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,03:09 IST

வால்பாறை : வால்பாறையில் தென் மேற்குப்பருவ மழை எதிரொலியாக தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், கொப்பளநோயால் தேயிலை செடிகள் பாதிக்கப்பட்டுள்ளன. வால்பாறையில் இந்த ஆண்டு பெய்துவரும் தென்மேற்குப்பருவ மழையினால் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. ஆனால் தொடர்ந்து பெய்துவரும் சாரல் மழையினால் தேயிலை செடிகள் துளிர்விட முடியாமல் அழுகியுள்ளது.  தேயிலை செடிக்கு மழை காலத்தில் ஏற்பட்டுள்ள "கொப்பள' நோயால் தேயிலை உற்பத்தி பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.இதை சமாளிக்க எஸ்டேட் நிர்வாகங்கள் பூச்சிக்கொல்லி மருந்து தெளித்து, தேயிலை செடிக்கு ஏற்பட்டுள்ள நோயை கட்டுப்படுத்தி வருகின்றனர்.

உபாசி தேயிலை ஆராய்ச்சியாளர் கூறியதாவது: வால்பாறையில் கடந்த ஆண்டு 15.7 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தியானது. ஆனால் இந்த ஆண்டு 18.7 மில்லியன் கிலோ கிராம் உற்பத்தியாகியுள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 3 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தியாகியுள்ளது. வழக்கமாக தென்மேற்குப்பருவ மழை பெய்வதால் ஜூன், ஜூலை மாதங்களில் தேயிலை உற்பத்தி வெகுவாக குறையும்.

அதே போல் செப்டம்பர், அக்டோபர், ஏப்ரல், மே மாதங்களில் மழைப்பொழிவு குறைந்து விடுவதால் இந்த சிதோஷ்ணநிலையில் தேயிலை உற்பத்தி அதிகமாக காணப்படுகிறது. வால்பாறையில் பெய்துவரும் பருவ மழையினால் தேயிலை செடிக்கு பரவியுள்ள கொப்பள நோயை தடுக்க காப்பர் ஆக்சி குளோரைடு, ஹேக்சாகோன்சோல் ஆகிய பூச்சிக்கொல்லி மருந்துகளை 7 நாட்களுக்கு ஒரு முறை தெளிப்பதன் மூலம் கொப்பளநோயை கட்டுப்படுத்தலாம் என்றார்.

**மக்காச்சோளம் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு ஆர்வம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,02:14 IST

பல்லடம்: மக்காச்சோளம் பணப்பயிராக உருவெடுத்து, "கை' கொடுப்பதால், பல்லடம், சுல்தான்பேட்டை வட்டார விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வம் காட்டுகின்றனர். விவசாயிகளின் ஆர்வத்தால், சாகுபடி பரப்பளவு 8,000 ஏக்கரில் இருந்து 10 ஆயிரம் ஏக்கராக அதிகரித்துள்ளது. பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரப் பகுதிகளில் கறிக்கோழி வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது. இப்பகுதிகளில் மட்டும் 3,500க்கும் மேற்பட்ட கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. கறிக் கோழிகளுக்கான தீவனம் தயாரிப்பில் மக்காச்சோளத்தின் பங்கு 50 சதவீதம். இதன் காரணாக ஏற்படும் கடும் கிராக்கியால் பல்லடம் மற்றும் சுல்தான் பேட்டை வட்டார விவசாயிகள் மக்காச் சோளம் சாகுபடியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். உள்ளூர் மக்காச்சோளம் முழுமையாக கொள்முதல் செய்யப்பட்டாலும், தேவை அதிகமாக உள்ளது. எனவே, ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் இருந்து தினமும் லாரிகள் மூலமாக 40 லோடு வரை மக்காச்சோளம் கொள்முதல் செய்கின்றனர்.

ஒரு மாதத்துக்கு முன் ஒரு குவிண்டால் மக்காச்சோளம் கொள்முதல் விலை ரூ.1,100 ஆக இருந்தது; தற்போது ஒரு குவிண்டால் ரூ.1,200 ஆக உயர்ந்துள்ளது. 100 நாள் பயிரான மக்காச்சோளம் ஒரு ஏக்கர் சாகுபடி செய்து அறுவடை வரை விவசாயி களுக்கு ரூ.18 ஆயிரம் செலவாகிறது. ஏக்கருக்கு மூன்று டன் மக்காச்சோளம் மகசூல் கிடைக்கிறது. இதுதவிர, ஒரு ஏக்கர் மக்காச்சோளம் சாகுபடியில் ரூ.3,000 மதிப்புள்ள மக்காச்சோளத் தட்டுக்கள் விவசாயிகளுக்கு கிடைக்கிறது. இவ்வாறு கிடைக்கும் தட்டுக்களை, கால் நடை வைத்துள்ள விவசாயிகள் தங்களின் தேவைக்கு பயன்படுத்தி வருகின்றனர். கால்நடை இல்லாத விவசாயிகள், காங் கயம்,

வெள்ளகோவில், மூலனூர், தாரா புரம் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு விற்பனை செய்கின்றனர்.

ஐந்தாண்டுக்கு முன், போதிய லாபம் தராத விவசாயமாக மக்காச்சோளம் திகழ்ந்தது. தற்போது, மக்காச்சோளம் சாகுபடி விவசாயிகளுக்கு பாதிக்கு பாதி லாபம் தரும் பணப்பயிராக மாறியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக மக்காச் சோளம் சாகுபடி நல்ல லாபம் தரும் விவசாயமாக உருவெடுத்துள்ளது. மக்காச் சோளம் சாகுபடிக்கு அதிக அளவு தண் ணீர், உரம் தேவை இல்லை. எனவே, பல் லடம், சுல்தான்பேட்டை வட்டார விவசாயிகள், தக்காளி, பீட்ரூட், மிளகாய் போன்றவற்றை சாகுபடி செய்யும் அளவை குறைத்து மக்காச்சோளம் சாகு படியில் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர்.
மக்காச்சோளம் சாகுபடிக்கு அதிக அளவு தண்ணீர், உரம் தேவை இல்லை. விவசாயிகளின் அதிக ஆர்வம் காரணமாக இரண்டு ஆண்டுகளுக்கு முன் பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் 8,000 ஏக்கர் மக்காச்சோளம் சாகுபடி செய்த பரப்பு, 10 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது.

ரசீது வழங்குவதில்லை : பல்லடம், சுல்தான்பேட்டை, செஞ்சேரிப்புத்தூரில் உள்ள பல விதை விற்பனை கடைகள், பூச்சி மருந்து கடைகளில் மக்காச்சோளம் சாகுபடிக்கு விவசாயிகள் விதை வாங்கும்போது, ரசீது வழங்குவ தில்லை. விவசாயிகள் கேட்டாலும், சில கடைகளில் ரசீது கொடுக்க மறுப்பு தெரிவித்துள்ளனர். ரசீது தராத கடைகளில் வாங்கப் படும் விதைகளில் முளைப்புதிறன் குறைபாடு இருந்தால், விவசாயிகள் அதற்கான நஷ்ட ஈடு கோர முடியாது. ரசீது பிரச்னை குறித்து திருப்பூர், கோவை கலெக்டர் அலுவலகங் களில் நடக்கும் விவசாயிகள் குறை கேட்பு முகாமில் விவசாயிகள் பல முறை முறையிட்டுள்ளனர். இருப் பினும், ரசீது கொடுக்க மறுக்கும் கடை உரிமையாளர்கள் மீது எவ்வித மான நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. இதன்காரணமாக மாவட்ட நிர்வாகம் மீது விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர்.

## 63 குவிண்டால் சோளம் விற்பனை

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,02:23 IST

திருப்பூர்: திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இந்த வாரம் 63 குவிண்டால் சோளம் விற்பனையானது. கடந்த ஆடி மற்றும் ஆவணி மாத துவக்கத்தில் பெய்த மழையை பயன்படுத்தி, விவசாயிகள் மானாவாரியாக சோளம் விதைத்தனர். வரும் நாட்களில் மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களை பயிர் செய்வர். மானாவாரி விதைப்பில் சோளம் பயிரிடுதல் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. ஆனால், ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சோளம் விற்பனை சரிந்துள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரி கூறியதாவது: திருப்பூரில் நடந்த ஏலத்தில் 63 குவிண்டால் சோளம் விற்றது. ஏராளமான விவசாயிகள் சோளம் விதைப்பை முடித்து விட்டனர். அடுத்த இரண்டு மாதத்துக்கு குறைந்த அளவே விற்கும். பருத்தி ஏற்றுமதிக்கான தடையை அரசு நீக்கியுள்ளதால், மாநிலம் முழுவதும் பரவலாக நல்ல விலை கிடைத்து வருகிறது. கரூர், திருச்சி விவசாயிகள், திருப்பூருக்கு வருவர். அந்தந்த பகுதியில் நல்ல விலை கிடைப்பதால், நேற்று விற்பனைக்கு வரவில்லை. கம்பு 13 குவிண்டால், ராகி 15; வரமிளகாய் 20 குவிண்டால் விற்பனை செய்யப்பட்டது. சோளம் 1,000 ரூபாய் முதல் 1,300 வரை; கம்பு 1,000 முதல் 1,100 வரை; ராகி 950 முதல் 1,100 வரை; வரமிளகாய் 3,500 முதல் 5,500 ரூபாய் வரை விற்றது, என்றார்.

**சந்தையில் காய்கறி வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,23:03 IST

சிவகங்கை சிவகங்கை வாரச்சந்தையில் நாட்டு காய்கறிகள் வரத்து அதிகம் இருந்தும், கூடுதல் விலைக்கு விற்கப் பட்டன.
நேற்றைய காய்கறி விலை நிலவரம் (கிலோ):24 க்கு விற்ற கத்தரிக்காய்- 20; 20 க்கு விற்ற வெண்டைக்காய் -16; 20 க்கு விற்ற பாகற்காய்- 24; 40 க்கு விற்ற முருங்கை பீன்ஸ்- 32; 20 க்கு விற்ற கேரட் -24; 20 க்கு விற்ற முள்ளங்கி- 16; 16 க்கு விற்ற உருளை கிழங்கு- 20; 10 க்கு விற்ற முட்டை கோஸ்- 15; 15க்கு விற்ற தக்காளி-18; 50 க்கு விற்ற கருணைக்கிழங்கு- 40; 35 க்கு விற்ற இஞ்சி- 40; அவரைக்காய்- 40; 80 க்கு விற்ற பட்டர் பீன்ஸ்- 60; வெங்காயம்- 15, பெல்லாரி- 15; 20 க்கு விற்ற காலி பிளவர்- 24; 40 க்கு விற்ற சேணைக்கிழங்கு- 36; சேம்பு- 40; 30 க்கு விற்ற பச்சை மிளகாய்- 20; பீட்ரூட்- 24; நூக்கல் -20; 60 க்கு விற்ற சோயாபீன்ஸ் 40; எலுமிச்சை- 25; பூசணி- 20; பீர்க்கை 20; 28 க்கு விற்ற டர்னிப் -30; 8 க்கு விற்ற சீனி அவரை 10; 15 க்கு விற்ற மல்லித்தழை 18 ரூபாய்.பழங்கள்: ஆப்பிள் முதல்ரகம்- 40; இரண்டாவது ரகம்- 30; ஆரஞ்சு- 60; சப்போட்டா- 16; திராட்சை வெள்ளை- 50; கறுப்பு-40; பேரிக்காய் 20; அன்னாசி பழம்- 20; மாதுளை- 60, இரண்டாவது ரகம்- 40 ரூபாய்.நேற்று நாட்டு காய்கறிகள் வரத்து அதிகம் இருந்தது. ஆனால் வியாபாரிகள் கூடுதல் விலை நிர்ணயம் செய்தனர். முகூர்த்தம், விழாக்கள் இல்லாத நிலையிலும் அதிக விலைக்கு விற்கப்பட்டதால், நுகர்வோர் ஏமாற்றம் அடைந்தனர்.

**தொடர் மழையால் விவசாயிகள்... உழவு பணிகளில் தீவிரம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,23:02 IST

திருப்புத்தூர்: சில நாட்களாக பெய்யும் மழையால் விவசாயிகளிடையே நம்பிக்கை துளிர் விட்டுள்ளது. திருப்புத்தூர் பகுதியில் மானாவாரி பயிர் உற்பத்தி அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளன. மாவட்டத்தில் பரவலாக பெய்யும் மழையை நம்பி விவசாயிகள் நாற்றங்கால் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஒரு வாரமாக இப்பணி தீவிரம் அடைந்துள்ளது. மழை தொடரும் என்ற நம்பிக்கையில், அதிகளவில் நாற்றங்கால் தயாராகின்றன. மத்திய ரக பயிரான, ஆடுதுறை 39 நெல் விதையை, பெரும் பான்மை விவசாயிகள் நம்பியுள்ளனர். இந்த ரகம் 30 முதல் 45 நாட்கள் வரை நாற்றங்காலில் வைத்திருந்து நடலாம்.மழை அதிகம்: தொடர் மழையால் கண்மாய்கள் நிரம்பியபின் அக்டோபரில் நடவு துவங்கும். திருப்புத்தூர் ஒன்றியத்தில் 15 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி துவங்கும் வாய்ப்பு உள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை, 11 நாட்களில் 284 மி.மீ., மழை மட்டுமே பெய்தது. குறைவான அளவு மழை, குறுகிய காலத்தில் பெய்ததால் மானாவாரி பயிர் விளைச்சல் வெகுவாக குறைந்தது. இந்த ஆண்டு அதிக மழைப்பொழிவு உள்ளது. கடந்த ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை, 21 நாட்களில், 369 மி.மீ., பெய்துள்ளது. அக்டோபரில் துவங்கும் வடகிழக்கு பருவ மழை டிசம்பர் வரை நீடிக்கும் என நம்பப்படுகிறது. இதனால் நெல், கடலை, பயறு வகை பயிர்கள் விளைச்சல் அதிகரிக்கும் என்ற எண்ணத்தில் விவசாயிகள், பணிகளை முடுக்கி விட்டுள்ளனர்.

**எகிறும் எண்ணெய் விலை மக்களுக்கு பண்டிகை பரிசு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,23:03 IST

சிவகங்கை: கடலைப்பருப்பு, எள்ளுக்கு தட்டுப்பாடு அதிகரித்துள்ளதால், சமையல் எண்ணெய் விலை உயர்ந்துள்ளது.சிவகங்கையில் மளிகை பொருள் விலை விபரம் (கிலோ):கடந்த வாரம் 68 ரூபாய்க்கு விற்ற துவரம் பருப்பு-72; தட்டப்பயறு- 48; 38க்கு விற்ற கடலைப்பருப்பு- 40; 86 க்கு விற்ற உளுந்தம் பருப்பு- 88; கொண்டக்கடலை, பாசிப்பருப்பு- 80; 66க்கு விற்ற பாசிப்பயறு- 68; மொச்சைப்பயறு- 48, வெள்ளை மொச்சை- 76; 27க்கு விற்ற பட்டாணி- 28, வெள்ளை பட்டாணி- 25; மல்லி- 48; புளி- 48, நயம் புளி- 52; பொரி கடலை- 40; வத்தல் முதல் ரகம்- 67, இரண்டாவது ரகம்- 53; 240க்கு விற்ற மலைப் பூண்டு- 220, தரப்பூண்டு- 100, சாதாப்பூண்டு - 60; சோம்பு- 140; வெந்தயம் -52; கசகசா -290; சீரகம்- 190; கடுகு- 45; மிளகு -260 ரூபாய்.

அரிசி விலை (கிலோ): கல்சர் பொன்னி- 32 ரூபாய்; டீலக்ஸ் பொன்னி- 28; ஐ.ஆர்., 20- 21; 23

க்கு விற்ற செல்லப்பொன்னி- 26; பொன்னி பச்சரிசி- 32; பச்சரிசி- 21; 21 க்கு விற்ற இட்லி அரிசி- 22; கோதுமை- 22; சோளம்- 16; கம்பு- 18; கேப்பை -16; வரகரிசி- 36 ரூபாய்.எண்ணெய் விலை நிலவரம்: கடந்த வாரம், ஒரு டின் (16 லிட்டர்) 1,280 ரூபாய்க்கு விற்ற கடலை எண்ணெய், 1,320 ஆக உயர்ந்துள்ளது. இதன் சில்லரை விலை 85 க்கு விற்கப்படுகிறது.1,280க்கு விற்ற நல்லெண்ணெய் 1,320 வரை உயர்ந்ததால், சில்லரை விலை 90 க்கும், தேங்காய் எண்ணெய் 88 ரூபாய்க்கும் விற்கப் பட்டன. 46க்கு விற்ற பாமாயில் விலை- 48.ஆயுத பூஜை உள்ளிட்ட பண்டிகைகள் வருவதால் பருப்பு, எண்ணெய் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பருப்பு விலையை குறைக்க அரசு அதிரடி விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,01:37 IST

புதூர்:பருப்பு விலையைக் குறைக்க, தமிழகத்தில் 3,200 ஏக்கரில் அனைத்து வித பயறுகளையும் பயிரிட, விவசாயிகளுடன் மத்திய அரசு, உலக பாங்க் மற்றும் டாடா நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளன. இதன் மூலம் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும். இந்தியாவில் பருப்பு விளைச்சல் குறைவாக இருப்பதால் கனடா, ஆஸ்திரேலியா, மியான்மர் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதற்கான வரி, போக்குவரத்து செலவு போன்ற காரணங்களால் பருப்பு விலை அதிகரிக்கிறது. இதை தவிர்க்க உலக பாங்க், மத்திய அரசு மற்றும் டாடா நிறுவனம் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன. இதன்படி பஞ்சாப் மற்றும் தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் 3,200 ஏக்கர் பாசன நிலங்களை தேர்வு செய்துள்ளனர்.

அனைத்து வித பயிர்களையும் பயிரிட விவசாயிகளுக்கு தேவையான உதவிகள் செய்ய உள்ளன. இது தொடர்பாக விவசாயிகளிடம், டாடா நிறுவனம் சார்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு நிச்சயம் 5 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும் எனவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் அறுவடை செய்த பயிர் மற்றும் உற்பத்தி செய்யப்படும் பருப்புகளை நேரடியாக மக்களிடம் விற்க, வர்த்தகர்களிடம் டாடா நிறுவனம் பேச்சு வார்த்தையும் நடத்தியுள்ளது. பொதுவாக வெளிமாநிலங்களில் இருந்து பருப்புகளை கொண்டு வரும்போது போக்குவரத்து செலவு, மாநில வரி என 100 கிலோ மூட்டைக்கு 250 முதல் 400 ரூபாய் வரை கூடுதல் செலவாகும். இந்த புதிய முயற்சியால் இந்த செலவு கட்டுப்படுத்தப்படும் என்பதால் அனைத்து பருப்புகளின் விலையும் குறையும், கட்டுப்பாட்டில் இருக்கும் என்கின்றனர் வர்த்தகர்கள்.

**தீபாவளி பண்டிகையையொட்டி மேலும் 1 கோடி கிலோ சர்க்கரை வாங்கப்படுகிறது உணவுத்துறை செயலாளர் சுவரன்சிங் தகவல்**

சென்னை, செப்.16–

தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகள் வருவதன் காரணமாக, ரேஷன் கடைகளில் தட்டுப்பாட்டை தவிர்க்க, கூடுதலாக 1 கோடி கிலோ சர்க்கரையை அரசு வாங்குகிறது. மற்ற பொருட்கள் தேவையான அளவுக்கு இருப்பு உள்ளது.

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று, உணவுத்துறை முதன்மை செயலாளர் சுவரன் சிங் கூறியதாவது:–

ராணுவ வீரர் போல் சோதனை

தமிழக ரேஷன் கடைகளில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 25 ரூபாய் மளிகை பொருள் பாக்கெட்டுகளுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. முன்னதாக, 30 லட்சம் பாக்கெட்டுகளுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டிருந்தது. அதில், 8.5 லட்சம் மளிகை பொருள் பாக்கெட்டுகள் கடைகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டன. மேலும் 2.5 லட்சம் பாக்கெட்டுகள் தற்போது வந்துள்ளன. இந்த மாத இறுதிக்குள், மீதமுள்ள 19 லட்சம் பாக்கெட்டுகளும் வந்துவிடும். வடசென்னையில் நேற்று, 12 இடங்களில் உள்ள ரேஷன் கடைகளுக்கு நான் நேரில் சென்று ஆய்வு செய்ததில், இந்த பாக்கெட்டுகளுக்கு நல்ல வரவேற்பு இருப்பது தெரிந்தது. எனவே, மேலும் 30 லட்சம் மளிகை பொருள் பாக்கெட்டுகளை கூடுதலாக வாங்க முடிவு செய்துள்ளோம். இதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

நான் மேற்கொண்ட சோதனையின்போது ஒரு கடையில், மண்எண்ணெய் சப்ளை செய்யும் வண்டியில் குறிப்பிட்ட அளவுக்கு குறைவாக மண்எண்ணெய் இருப்பது தெரியவந்தது. அதற்கு காரணமான ஊழியர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு கடையில் ராணுவ வீரர் என்று என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, “என்னிடம் ரேஷன் அட்டை இல்லை. கூடுதல் பணம் தருகிறேன். பொருள் தாருங்கள்’’ என்று கேட்டபோது, அந்த ஊழியர் முடியவே முடியாது என்று மறுத்துவிட்டார். இந்த ஆய்வின்முடிவில் ரேஷன் கடைகளில் பொருட்கள் அனைத்தும் போதுமான அளவில் இருப்பது தெரியவந்தது. 15 தேதியாகியும் இருப்பு பிரச்சினை இல்லாமல் இருப்பது திருப்தியாக இருந்தது.

10 ஆயிரம் டன் சர்க்கரை

இனி வரும் மாதங்களில், தீபாவளி மற்றும் இதர பண்டிகைகள் தொடர்ச்சியாக வர இருப்பதால், ரேஷன் கடைகளில் தட்டுப்பாடு இன்றி பொருட்கள் கிடைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரிசியை பொருத்தவரை அடுத்த ஆண்டு மார்ச் வரையும், கோதுமை, 2011 நவம்பர் வரைக்கும் இருப்பு உள்ளது. உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, பாமாயில், கோதுமை மாவு ஆகியவை அடுத்த 3 மாதங்களுக்கு போதுமான அளவில் உள்ளது. பண்டிகையின்போது சர்க்கரையில் பலகாரம், பாயாசம் போன்றவற்றை மக்கள் அதிக அளவில் செய்வார்கள். அதற்காக, 10 ஆயிரம் டன் சர்க்கரையை (1 கோடி கிலோ) மாநில சர்க்கரை கூட்டமைப்பிடம் வாங்கவுள்ளோம்.

தமிழக ரேஷன் கடைகளுக்கு ஒரு மாதத்துக்கு 34 ஆயிரம் டன் சர்க்கரை தேவைப்படுகிறது. மத்திய அரசிடமிருந்து (லெவி) 10,832 டன்னும், 16 ஆயிரம் டன் சர்க்கரையை, மாநில சர்க்கரை கூட்டமைப்பில் இருந்தும் வாங்குகிறோம். மீதம் தேவைப்படும் சர்க்கரையை வெளிமார்க்கெட்டில் வாங்குகிறோம். ரேஷன் கடையில் கிலோ 13.50–க்கும் விற்கப்படும் சர்க்கரை, வெளிமார்கெட்டில், ரூ.26–க்கு விற்கப்படுகிறது.

இவ்வாறு சுவரன் சிங் தெரிவித்தார்.

**கோவை நகர பகுதியில் மழை இல்லாததால் நிலத்தடி நீர்மட்டம் 2½ அடி குறைந்தது**

கோவை,செப்.16–

கோவையில் நகர பகுதிகளில் போதிய மழை பெய்யாததால், குளங்கள் வற்றி, நிலத்தடி நீர்மட்டம் 2½ அடி குறைந்துள்ளது.

குளங்கள் வற்றுகிறது

கோவை மாவட்டத்தில், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு இரு பருவமழை காலங்களில் மழை பெய்வது வழக்கம். இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை காலத்தில், மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியில் மட்டும் ஓரளவு மழை பெய்தது. இதனால் சிறுவாணி அணையின் நீர்மட்டம் நேற்றைய நிலவரப்படி 873.20 மீட்டராக உள்ளது. இதேபோல் பில்லூர் அணையிலும் நீர்மட்டம் முழுகொள்ளவில் உள்ளது.

ஆனால் வழக்கமாக நகர பகுதிகளில் பெய்யும் மழை, இந்த ஆண்டு முழுமையாக பெய்யவில்லை. இதனால் கோவை வடக்கு, தெற்கு தாலுகா பகுதிகளிலும், பொள்ளாச்சியிலும் மழை இல்லாததால் சுற்றுப்பகுதிகளில் உள்ள குளங்களில் நீர்மட்டம் கடந்த 3 மாதங்களாக குறைந்துள்ளது. கோவை உக்கடம் பெரியகுளம், வாலான்குளம், குறிச்சி குளம், முத்தண்ணன்குளம், பேரூர் குளம், சிங்காநல்லூர் குளம் ஆகியவற்றில் நீர்மட்டம் மள,மள என்று குறைந்துள்ளது. சுண்டக்காமுத்தூர் குளம், செல்வபுரம் சிந்தாமணி குளம் ஆகியவை வற்றியநிலையில் பாளம்,பாளமாக வெடித்து காட்சி அளிக்கிறது.

2½ அடி குறைந்தது

குளங்களில் நீர்மட்டம் குறைந்ததாலும், நகரில் மழை இல்லாததாலும் நிலத்தடி நீர்மட்டம் வேகமாக குறைந்துள்ளது. இதுகுறித்து பொதுப்பணித்துறையின் நிலத்தடி நீர்மட்ட பிரிவு என்ஜினீயர் விஜயரத்தினம் கூறியதாவது:–

கோவை மற்றும் பொள்ளாச்சி உள்பட மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளது. இதுகுறித்து கடந்த சில மாதங்களுக்கு முன் எடுக்கப்பட்ட புள்ளி

விவரங்களுடன், கடந்த வாரம் எடுக்கப்பட்ட புள்ளி விவரத்தை ஒப்பிட்டு பார்த்தபோது, கோவை உள்பட மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் 2 முதல் $2^{1/2}$ அடி குறைந்துள்ளது. கவுண்டம்பாளையம் பகுதியில் 200 அடிக்கு கீழ்தான் தண்ணீர் வருகிறது. இதேபோல் கோவைப்புதூர் உள்பட பல்வேறு பகுதிகளிலும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளது. வடகிழக்கு பருவமழை காலத்தில் மழைபெய்வதை பொருத்து, குளங்கள் நிரம்பி நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு என்ஜினீயர் விஜயரத்தினம் கூறினார்.

ஆழ்குழாய் கிணறுகள்

தொழில்நகரமான கோவை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. இதற்காக ஏராளமான இடங்களில் ஆழ்குழாய் மூலம் தண்ணீர் உறிஞ்சப்படுகின்றன. அளவுக்கு அதிகமாக தண்ணீர் உறிஞ்சப்படுவதன் காரணமாகவும் நிலத்தடி நீர்மட்டம் குறைகிறது. எனவே ஆழ்குழாய் போடுவதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், கண்காணிக்கப்பட வேண்டும்.

பொதுவாக மரங்கள் அடர்ந்த பகுதிகளில்தான் மழையும் பெய்து வருகிறது. சாலை விரிவாக்கப்பணிகளுக்காக கோவையில் அவினாசிரோடு, திருச்சி ரோடு ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்பட்டதால், கோவை நகரில் கடந்த கோடையின்போது வரலாறு காணாத அளவில் வெப்பம் அதிகரித்து காணப்பட்டது. தற்போது மேட்டுப்பாளையம் சாலை விரிவாக்கத்துக்காக அந்த ரோட்டிலும் ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்படுகின்றன. இதனால் அந்த ரோட்டில் வரும் கோடையின்போது அதிக அளவு வெப்பம் காணப்படும். நகரில் வெட்டப்படும் மரங்களுக்கு மாற்றாக, மரங்கள் நடப்படும் என்று அறிவிக்கப்பட்டாலும், மரம் வளர்ப்பில் இன்னும் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. வரும் காலங்களில் மழை அளவு குறைவதை தடுக்க மரங்கள் வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று பசுமை ஆர்வலர்கள் கருத்து தெரிவித்தனர்.

வேளாண்மை
செய்திகள்



# 'ஜீரோ பட்ஜெட்' முறையில் சின்ன வெங்காய சாகுபடி

## சாதனை படைத்துவரும் தாராபுரம் விவசாய தம்பதிகள்

**'சா**ம்பார் வெங்காயம்' என்று அழைக்கப்படும் சின்ன வெங்காயத்தை ஜீரோ பட்ஜெட் முறையில் சாகுபடி செய்து சிறப்பான மகசூல் கண்டு வருகிறார்கள் திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தை அடுத்த ஏரசினாம்பாளையத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம்-வஞ்சிக்கொடி தம்பதியர்.

சின்ன வெங்காய அறுவடை நடந்து கொண்டிருக்கும் போதே நம்மிடம் பேசினார் சுப்பிரமணியம்.

அவர் கூறியதாவது:-

கடந்த 3 ஆண்டுகளாக தென்னை, மா மற்றும் முருங்கை செடிகளை ஜீரோ பட்ஜெட்டில்தான் சாகுபடி செய்தேன். முதல் போகத்தில் விளைச்சல் குறைஞ்சாலும், போகப் போக விளைச்சல் அதிகரித்ததை கண்கூடாக பார்க்க முடிந்தது.

### ஜீரோ பட்ஜெட்

இது வரை நீண்ட வயது உள்ள பயிர்களை மட்டுமே ஜீரோ பட்ஜெட்டில் விவசாயம் செய்து வந்தோம். அதன் பின்னர் குறுகிய கால வயது உடைய காய்கறிகளையும் விளைவிக்க முடிவு செய்தேன். இதற்காக முதல் முயற்சியாக சின்ன வெங்காயத்தை நடவு செய்தேன். இதற்காக கடந்த 2 ஆண்டுகளாக விவசாயம் செய்யாமல் போட்டு வைத்திருந்த நிலத்தை தேர்வு செய்தேன். முதல் தடவையாக நடுவதால் அரை ஏக்கரில் நடவு செய்தோம்.

கோடை மழைக்கு பிறகு சட்டிக்கலப்பை கொண்டு ஆழமாக உழுதோம். நிலத்தில் வளர்ந்து கிடந்த புல் புதர்களை அப்படியே மண்ணில் அமுக்கினோம். அந்த புல், புதர் எல்லாம் மக்கிய பிறகு அதாவது ஒரு மாதம் கழித்து 2 உழவு செய்து மண்ணை இளக்கினோம். நிலம் ஆறின பிறகு ஏர் உழவு செய்து சின்ன வெங்காயத்தை நடவு செய்தோம். எந்த கஷ்டத்தையும் கொடுக்காமல் அருமையாக விளைச்சலை கொடுத்தது சின்ன வெங்காயம்.

நல்ல ரோஸ் நிறத்தில், ஒரே சீராக, அழுகல், குத்தல் எதுவும் இல்லாமல் கெட்டித் தன்மையுடன், கோலி குண்டுகளை கொட்டி வைத்தது மாதிரி சின்ன வெங்காயம் விளைச்சல் கிடைத்தது.

### விதை வெங்காயம்

சின்ன வெங்காயத்தின் மொத்த வயது 60 முதல் 70 நாட்கள் ஆகும். நல்ல வடிகால் வசதி உள்ள மணல் கலந்த செம்மண் நிலம் வெங்காய சாகுபடிக்கு ஏற்றது. இந்த நிலத்தில் பயிர் செய்தால் நல்ல மகசூல் கிடைக்கும். இதற்காக நிலத்தை 2 அல்லது 3 முறை உழவு செய்து மண்ணை பொல பொல தன்மை உடையதாக ஆக்கினேன். கடைசி உழவுக்கு முன்பாக அரை ஏக்கருக்கு 3 டன் தொழு உரத்தை இட்டு உழவு செய்தேன்.

மேய்ச்சல் நிலமாக இருந்தால் கால்நடைகளான ஆடு மாடு ஆகியவற்றின் கழிவுகள் இந்த நிலத்தில் மண்டிக் கிடக்கும். அதனுடன் செடி, கொடிகளை மடக்கி உழவு செய்தால் போதும். தனியாக அடி உரம் எதுவும் போடத் தேவையில்லை. அதன் பிறகு ஏர் மூலம் ஒரு உழவு செய்தேன். 2 அடி இடைவெளியில் பார் அமைத்து, பாத்தி நிறைய தண்ணீர் பாய்ச்சி நீர் நன்றாக வற்றிய பிறகு, அரை அடிக்கு ஒரு காய் வீதம் சின்ன வெங்காயத்தை ஈர நடவு செய்தேன். நாற்று உற்பத்தி செய்தும் நடவு செய்யலாம். இதற்காக அரை ஏக்கருக்கு 250 கிலோ விதை தேவைப்படும்.

### 60 நாட்களுக்குள் அறுவடை

அறுவடைக்கு பிறகு 60 நாட்கள் இருப்பு வைக்கப்பட்ட, நேர்த்தி செய்யப்பட்ட விதை வெங்காயம் விவசாயிகளிடம் கிடைக்கும். இந்த விதை வெங்காயத்தை வாங்கி பயன்படுத்தினேன். அதை தொடர்ந்து 5 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினேன். 10 நாட்களுக்கு ஒரு முறை பாசன நீரில் 200 லிட்டர் ஜீவாமிர்தத்தை கொடுத்தேன். அதைத் தவிர வேறு எந்த இடுபொருளும் வைக்கவில்லை. இதன் பிறகு 15, 30 மற்றும் 45-ம் நாளில் களை எடுத்தேன். இதை தொடர்ந்து இயற்கையில் கிடைக்கும் உரங்களான மாட்டு மூத்திரம், சாணி, பல்வேறு மரங்களின் இலை தலைகள் உரமாக வைத்தேன். இதன் காரணமாக பயிர் நன்றாக வளர்ந்து 45 நாட்களுக்கு பிறகு காய் பெருகத் தொடங்கியது. பச்சை பிடித்து நிற்கும் வெங்காய தாள்கள் வெளுத்துப் போய் கீழே சாயும் சமயத்தில் 55 முதல் 60 நாட்களுக்குள் அறுவடையை ஆரம்பித்தேன்.

### ரசாயன முறை

இதன் மூலம் அரை ஏக்கரில் 2,500 கிலோ மகசூல் கிடைத்தது. இதுவே ரசாயன முறையில் சாகுபடி செய்து இருந்தால் அரை ஏக்கரில் 3,500 கிலோ வரை மகசூல் எடுத்து இருக்க முடியும். இந்த முறையில் இடுபொருள் மற்றும் பூச்சிக்கட்டுப்பாடு செலவு எல்லாம் சேர்த்து கூடுதல் மகசூலை கட்டுப்படுத்தி விடும். வெங்காயம் சீக்கிரமாக அழுகி போய்விடும் பொருள். அதனால் பட்டுனு விதைச்சோம், சட்டுனு அறுவடை செய்தோம். ரசாயணம் போட்டு வளர்த்த வெங்காயமா இருந்தா 10 நாளில் கெட்டுவிடும். இதற்கு பட்டறை எல்லாம் போட்டு பாதுகாப்பு பண்ணித்தான் விற்க முடியும். ஆனால் ஜீரோ பட்ஜெட்டில் விளைந்த வெங்காயத்தை பட்டறை போடாமல் வைத்திருந்தாலும் 3 மாசம் வரைக்கும் அழுகாது. அதனால் தான் அறுவடை செய்த வெங்காயத்தை ஒட்டு மொத்தமாக விற்காமல், தினமும் கொஞ்ச கொஞ்சமாக விற்க முடிந்தது. நாள் தோறும் கொஞ்சம் கொஞ்சமாக கொண்டு போயி உழவர் சந்தையில் விற்றோம்.

மாசிப்பட்டத்தில் தான் வெங்காயம் விதைத்திருந்தேன். பொதுவாக வெங்காயத்துக்கு ஏற்ற பட்டம் வைகாசி, கார்த்திகைதான். இனி வர உள்ள வைகாசிப்பட்டத்திலும் சின்ன வெங்காயம் நடவு செய்ய உள்ளோம். நிச்சயமாக கூடுதல் மகசூல் எடுக்க போகிறோம்.

இவ்வாறு விவசாயி சுப்பிரமணியன் கூறினார்.

# அதிக உற்பத்திக்கு உதவும் 'வேளாண் சந்தைகள்'

**நா**ட்டில் முழுநேரமாக வேளாண்மையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் எண்ணிக்கை மிக மிக அதிகம். பலவகை பயிர்களின் சாகுபடியை தடையின்றி செய்து முடிப்பது என்பது தற்போது விவசாயிகளுக்கு பெரும் சவாலை ஏற்படுத்தி வருகிறது. ஏனெனில் ஆரம்பகாலத்தில் கிடைத்தது போல், போதிய வேலை ஆட்கள் கிடைக்காது தான்.

### வேளாண் சந்தைகள்

இதனால் நஷ்டம் இல்லாமல் உற்பத்தியை முடிக்க, நிலத்தை உழுதல், களைகளை அகற்றுதல், நெல் விளைச்சலை அதிகரிக்க மண்ணை பண்படுத்துதல், மரங்களை அகற்றுதல் போன்ற பணிகளுக்கு எந்திரங்களின் உதவியை விவசாயிகள் தேடி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது. இவை ஓரிடத்தில் கிடைக்கிறதா? என்றால், கிடைப்பது இல்லை. ஒவ்வொன்றையும் விவசாயிகள் தேடித்தேடி வாங்க வேண்டியுள்ளது.

வேளாண் உற்பத்தி பொருட்களை தொலைவில் உள்ள வேளாண் மையங்களுக்கு சென்று வாங்கி உடனடியாக பயன்படுத்தி பயன்பெறுவது என்பது பெரும் விவசாயிகளுக்கு சாத்தியம். கொள்முதல் மற்றும் போக்குவரத்து செலவு ஆகியவற்றை சமாளிப்பது சிறு விவசாயிகளுக்கு சாத்தியம் இல்லை. இதற்கு வேளாண் பொருட்கள் அனைத்தும் தங்கு தடையின்றி அனைத்து தரப்பு விவசாயிகளும் வாங்கும் தொலைவில் வேளாண் மையங்கள் இருக்க வேண்டியது அவசியம். அந்தவகையில் நாடு முழுவதும் வேளாண் சந்தைகள்(அக்ரி மார்ட்) ரத்னகிரி இம்பெக்ஸ் என்ற வேளாண் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வருகின்றன.

### விவசாயிகள் வரவேற்பு

கர்நாடக மாநிலத்தில் விவசாய நிலங்கள் அதிகமாக இருக்கும் 20-க்கும் மேற்பட்ட இடங்களில் வேளாண் சந்தைகள் அமைக்கப்பட்டு உள்ளன. இங்கு வேளாண்மைக்கு தேவையான பொருட்கள் அனைத்தும் கிடைத்ததால் விவசாயிகளிடம் பெரும் வரவேற்பை பெற்று உள்ளது. இதைத்தொடர்ந்து தற்போது தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு இடங்களில் சந்தைகள் அமைக்கப்பட உள்ளது. முதல் கட்டமாக சேலம் மாவட்டத்தில் ஒரு சந்தை நிறுவப்பட்டு உள்ளது.

தொடர்ந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சந்தைகள் அமைக்கப்பட உள்ளன. இந்த சந்தையில் வேளாண் தொழிலுக்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் அருகில் உள்ள இடங்களில் பெற்று உற்பத்தியை அதிகரிக்க முடியும். இதனால் விவசாயிகள் செலவை குறைத்து லாபம் பெறலாம்.